# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 16951/SCIC/2023**

திரு.பா.சேக்தாவூது த/பெ.M.S.பாட்ஷா
24/1, ஆனந்தவள்ளி வாய்க்கால் மேல்முறையீட்டாளர்
பொன்காடு,
பேராவூரணி வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்-614 804.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
பேராவூரணி., தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 18.07.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.07.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 31.08.2023 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 23.09.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.12.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 30.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / வட்டாட்சியர் அலுவலகம், பேராவூரணி வட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "ராவுத்தனவயல் ஊராட்சி மறவன் வயல் கிராமத்தில் சர்வே எண்.14-ல் 4 ஏக்கர் 42 சென்ட் மேட்டுக்குளம் ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி மதுரை உயர்நீதிமன்றம் 02/09/2015 அன்று ஆணை பிறப்பித்தது. இன்னும் ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருப்பதற்கான காரணம் " எனக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.எம்.ராஜமாணிக்கம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி வட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு ஏற்கனவே 21/07/2023, 31/08/2023 மற்றும் 19/12/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 30/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார். இன்றைய விசாரணையின் போதும், மனுதாரர் 2015 ஆம் ஆண்டே, உயர்நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி உத்தரவு பிறப்பித்திருந்தும், ஏன் இதுநாள் வரை அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை என்பதற்கான காரணம் என்ன என்று வினவிய மனுதாரர், அதனைக் கோரியே, தான் பிரிவு 6(1)-ன் கீழ் மனு அனுப்பியதாகவும், ஆனால் தனக்கு தகவல் அளிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பினரின் வாதுரைகளும் கேட்கப்பட்டன. பொதுத் தகவல் அலுவலர் மேற்குறிப்பிட்டவாறு 21/07/2023, 31/08/2023 மற்றும் 19/12/2024 தேதிகளிட்டு அளித்த தகவல்களை ஆணையம் ஏற்கவில்லை.**

**3. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி வட்டம் அவர்கள் திருத்திய / சரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை 17/07/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16951/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
பேராவூரணி., தஞ்சாவூர் மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.பா.சேக்தாவூது த/பெ.M.S.பாட்ஷா
24/1, ஆனந்தவள்ளி வாய்க்கால்
பொன்காடு,
பேராவூரணி வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்-614 804.

RG/PC